**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் மானாமதுரை**
***ஒ.எஸ்.104/2017***
**2024-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17-ம் நாள் செவ்வாய்கிழமை**

**வாதி-பிரதிவாதிகளின் சாட்சியின் வாக்குமூலம். 1869ம் ஆண்டு சட்ட எண். 44வது பிரிவு 6(1)ன்படி கிரேடு III பெஞ்ச் கிளார்க் திரு.எஸ்.செல்லபாண்டியன் என்பவரால் உறுதிப்பிரமாணம் செய்யப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்** | **: ராஜாமணி** | **சாதி** | **:** |
| **த-பெ** | **:** | **சமயம்** | **:** |
| **கிராமம்** | **:** | **தொழில்** | **:** |
| **வட்டம்** | **:** | **வயது** | **:** |

## வா.சா. 1 ராஜாமணி ஆஜர்.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

வா.சா.ஆ.1 ஆவணத்தில் உங்களுடைய முன்பாத்தியஸ்தர் எப்படி பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தாய்வழி பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கான மூல பத்திரத்தை பொறுத்து வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாய்வழி பாத்தியமான சொத்து எப்படி முன்பாத்தியஸ்தருக்கு கிடைக்கப்பெற்றது என்ற விவரங்கள் வா.சா.ஆ.1ல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்று போட்டு பார்த்தேன். அதை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை. நான் வா.சா.ஆ.1யை கிரையம் வாங்குவதற்கு முன்பு வில்லங்க சான்று உங்கள் பெயரில் போட்டுகிறீர்களா, முருகேசன் பெயரில் போட்டுள்ளீர்களா என்றால் முருகேசன் பெயரில் போட்டு பார்த்தேன்.

வா.சா.ஆ.1யை கிரையம் வாங்கிய போது தங்கள் பெயரில் வில்லங்கம் பார்க்காமல் முருகேசன் பெயரில் ஏன் வில்லங்கம் பார்த்தீர்கள் என்றால் எனக்கு வில்லங்கம் இல்லை என்று தெரியும், அதனால் முருகேசன் பெயரில் போட்டுப்பார்த்தேன். முருகேசனை இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்க தயாராக உள்ளேன். என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழ் முருகேசன் போட்டது தான். என்னிடம் காட்டப்படும் வில்லங்க சான்றிதழ் சொத்து விவரத்தில் கிணறு, மோட்டார் பம்புசெட், மின்இணைப்பு ஆகியவை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த வில்லங்க சான்று **பி.வா.சா.ஆ.1** ஆகும்.

வில்லங்க சான்றிதழ் போட்டு பார்த்து 2 மாதங்களில் வா.சா.ஆ.1 கிரையப்பத்திரம் போட்டேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் என்ன வகையான கிணறு என சொல்லப்படவில்லை என்றால் சரிதான். அதே போல எத்தனை அடி அகல கிணறு என்று சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மின்இணைப்பு யார் பெயரில் இருக்கிறது என்ற விவரமும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கிரையப்பத்திரம் எழுதப்பட்ட போது மின் இணைப்பு சம்மந்தமான மின்கட்டண ரசீது, மின் இணைப்பு யார் பெயரில் இருப்பதற்கான ஆவணம், மின் இணைப்பு செலுத்தப்பட்ட காப்பீடு ரசீது ஆகிய ஆவணங்களை முருகேசன் கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

கிணறு உரிமைச்சான்று, விஏஓ சான்று, மின் இணைப்பு, மோட்டார் உரிமம் சேர்த்து தான் எனக்கு முருகேசன் கிரையம் கொடுத்தார். மேற்படி ஆவணங்கள் முருகேசன் கொடுத்துள்ள விவரத்தை வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7

ஆவணம் சட்டப்படி செல்லுபடியாகாத ஆவணம் என்றால் விஏஓ-வை விசாரித்தால் தெரியும். விஏஓ ஆவணங்களை முறையாக பார்வையிடாமல் போலிச்சான்றிதழாக வா.சா.ஆ.7யை கொடுத்துள்ளார் என்றால் தவறு, நேரில் வந்து பார்த்து தான் சான்று கொடுத்தார். வா.சா.ஆ.1 எழுதப்பட்ட காலத்தில் மின் இணைப்பு முத்துராஜ்தேவர் பெயரில் இருந்தது என்றால் சரிதான். முத்துராஜ் தேவரிடமிருந்து முருகேசனும், அவரது தாயாரும் ஏதாவது ஆவணம் எழுதி வாங்கினார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

நீங்கள் கிரயம் வாங்கியதற்கு முன்பு முத்துராஜ்தேவர் மின்இணைப்பு இருப்பதை முருகேசனிடம் கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் தெரிந்துகொண்டேன். நீங்கள் தாக்கல் செய்த ஆவணங்களில் தாவா சொத்துக்கான புலப்படம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 ஆவணத்தை கிராம நிர்வாக அலுவலரிடம் பெறும் போது புலப்படத்தை பெற்று வைத்துள்ளீர்களா என்றால் வைத்துள்ளேன். ஆனால் அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்துவிவர நான்குமால் படி 7 செண்டு விஸ்தீரணமானது மொத்த சொத்தில் ஆக வடகிழக்கில் இருக்கு என்று சொல்கிறேன் என்றால் சரிதான். நீங்கள் வருவாய்த்துறையில் பட்டா மாறுதல் நடவடிக்கை செய்யும் போது வா.சா.ஆ.1 சொத்துவிவரத்தில் கண்டுள்ள படி மொத்த சொத்தில் ஆக வடகிழக்கு மூலையில் கிரயம் சொத்து 7 செண்டு உள்ளது என்பதற்கு பட்டா மாறுதல் பெறாமலும், அதற்கு தெற்கே 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 7 செண்ட் இருப்பதாக கண்டு தவறுதலாக உட்பிரிவு செய்து பட்டா பெற்றுள்ளீர்கள் என்றால் சரியல்ல.

தவறுதலாக கிரயம் பெற்ற இடத்தை விட்டு வேறு இடத்தில் உட்பிரிவு செய்து பட்டா வாங்கியதை ஆட்சேபித்து அதனை ரத்து செய்யக்கோரி 1ம் பிரதிவாதி சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் ந.க.அ.3/1788/2017 என்ற எண்ணில் நடவடிக்கை எடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த நடவடிக்கையில் முருகேசனும், வள்ளியும் எதிர்மனுதாரர்களாக சேர்க்கப்பட்டுள்ளார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முருகேசன் போன வாய்தாவிற்கு இந்நீதிமன்றத்திற்கு என்னுடன் வந்தார் என்றால் நான் அவரை பார்க்கவில்லை, எனக்கு அது பற்றி தெரியாது. மேற்படி சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் நடவடிக்கை பற்றி முருகேசன் என்னிடம் கூறினாரா என்றால் கூறவில்லை.

முருகேசனின் தாயார் கரு.வள்ளி 01.06.1983ல் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தேதி தெரியாது, இறந்தது தெரியும். வா.சா.ஆ.1 கிரயம் வாங்கும் போது முருகேசன் அவர்களது தாயாரின் இறப்புச்சான்றிதழ் என்னிடம் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை. முருகேசனின் தாயார் வள்ளிக்கு தாவா சொத்து எப்படி பாத்தியம் என்று பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளீர்களா என்றால் வள்ளி பெயரில் பட்டா இருந்தது என்பதால் பிராதில் சொல்லியுள்ளேன். எந்த அடிப்படையில் பட்டா ஏற்பட்ட விவரம் அது எனக்கு தெரியாது. 1983ல் ஏற்பட்ட பாகவிஸ்தி படி வள்ளிக்கு கிடைத்தது என்று சொல்லியுள்ளேன் அது முருகேசன் என்னிடம் சொன்னதை வைத்து சொன்னேன். பாகவிஸ்திக்கான ஆவணங்களையும் முருகேசன் என்னிடம் கொடுக்கவில்லை.

பாகவிஸ்தி ஏற்படவில்லையென்றும், 01.06.1983ல் வள்ளி இறந்துவிட்டார் என்றும் நீங்கள் வழக்கிற்காக பொய்யாக 1983 வருடம் பாகவிஸ்தி வள்ளிக்கு கிடைத்ததாக பொய்யாக கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நிரூபண வாக்குமூலத்தில் 4வது பாராவில் தாவா சொத்துக்கு மேற்கு, வடக்கு, தெற்கே புல எண்.149/6ஏ-ல் உள்ளது என்ற குறிப்பிட்டுள்ளவாறு வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்துவிவரத்தில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரைய சொத்திற்கும் வடக்கே புல எண்.149/1 தான் உள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.1

கிரைய சொத்தானது மொத்த சொத்தின் வடமேற்கு மூலையில் உள்ளது என்றால் சரியல்ல, வடகிழக்கு மூலையில் உள்ளது.

நிரூபண வாக்குமூலத்தில் 4வது பாராவில் தாவா சொத்துக்கு வடக்கு பகுதியில் புல எண்.149/6ஏ உள்ளதாக சொல்லியிருப்பது தவறு என்றால் சரியல்ல. புல எண்.149/6ஏ தாவா சொத்துக்கும் தெற்கு தான் புல எண்.149/6ஏ உள்ளது என்றால் சரிதான். புல எண்.149/6ஏ-க்கு நேர் வடக்கே 149/6பி உள்ளது என்றால் சரிதான். தாவா மொத்த சொத்தும் புல எண்.149/6 ஆதியில் யார் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் வள்ளி, ராக்கு, ரங்கம்மாள் ஆகியோருக்கு பாத்தியப்பட்டதாக இருந்தது. அதற்கு ஆவணங்கள் எதுவும் இல்லை. புல எண்.149/6 மொத்த சொத்து ஆதியில் சோனைமுத்து செட்டியாருக்கு பாத்தியப்பட்டு, அதன் பின்பு முத்துராஜ்தேவருக்கு கிரையப்படி பாத்தியப்பட்டதாக இருந்தது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

அதனடிப்படையில் தான் தாவா சொத்து கிணறு, மோட்டார் பம்பு செட், மின் இணைப்பு முத்துராஜ் தேவர் பெயரில் இருந்து வருகிறது என்றால் சரிதான். நீங்கள் சொல்வது போல் முருகேசனுக்கும், அவரது தாயார் வள்ளிக்கும் தாவா சொத்தில் எந்தவிதத்திலும் பாத்தியம் இல்லை என்று சொல்கிறார்கள் என்றால் சரியல்ல. வள்ளி, முருகேசன் பெயரில் 7 செண்டுக்கு பட்டா மாறியதற்கான பட்டா மாறுதல் உத்தரவு முருகேசன் என்னிடம் கொடுக்கவில்லை. அதனால் எந்த அடிப்படையில் பட்டா மாறியது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பாகப்பிரிவினையின் படி பட்டா மாறியது. பாகப்பிரிவினை பத்திரம் எதுவும் என்னிடம் முருகேசன் கொடுக்கவில்லை.

முருகேசன் தாக்கல் செய்துள்ள கேவியட் மனு என்னிடம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். இந்நீதிமன்றத்தில் நான் கேவியட் மனு எண்.46/2017 ஆக கேவியட் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கேவியட் மனு நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கேவியட் மனுவில் புல எண்.149/6பி-ல் கிணறு, மின்மோட்டார், பம்பு செட் இருந்ததாக சொத்துவிவரத்தில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நீங்கள் சொத்துவிவரத்தில் கிணறு, மின்மோட்டார், பம்பு செட் இருப்பதை குறிப்பிடப்படவில்லை என்பதால் சிஓ.பி .எண்.46/2017 மனு நகலை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொல்கிறேன் என்றால் தெரியாமல் நடந்துவிட்டது.

வில்லங்கசான்றிதழின் படி கிணறு, மின்மோட்டார், பம்பு செட் புல எண்.149/6ஏ-ல் அடங்கியுள்ளது என்ற விவரம் நீதிமன்றத்திற்கு தெரியக்கூடாது என்பதற்காகத்தான் நீங்கள் வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 08.02.2017ல் புல எண்.149/6பி-க்குரிய பதிவுத்துறை வில்லங்க சான்றிதழ் பெற்ற போது அதில் கிணறு, மின்மோட்டார், பம்பு செட் இருப்பதாக காட்டப்படவில்லை என்றால் நாங்கள் கொடுக்கவில்லை. 08.02.2017ல் புல எண்.149/6பி-க்குரிய பதிவுத்துறை வில்லங்க சான்றிதழ் பெற்ற போது அதில் கிணறு, மின்மோட்டார், பம்பு செட் இருப்பதாக காட்டப்படவில்லை என்பதால் தான் நீங்கள் அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் மறைத்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லுபடியாகாது அதன் அடிப்படையில் உங்களுக்கு எந்த உரிமை மூலமும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 கிரையப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்துவிவரத்தின் படி தாவா சொத்தானது மொத்த சொத்தில் ஆக வடகிழக்கு மூலையில் உள்ளதால் அது யுடிஆர் புலப்பட படி அந்த இடத்தில் கிணறு, மோட்டார், பம்பு செட் குறிப்பிடப்படவில்லை என்றால் தவறு. உங்களுக்கு தாவா சொத்தில் எவ்வித பாத்தியமும்,உரிமையும், அனுபவம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணம் 14.09.2016ல் 1ம் பிரதிவாதி கிரையம்

வாங்கிய கிரைய பத்திரத்தில் சொத்துவிவரத்தில் மின் இணைப்பு எண்.29, வட்டக்கேணி, மின்சார இணைப்பு கண்டுள்ளது என்றால் சரிதான், அது தவறுதலாக உள்ளது. வா.சா.ஆ.8 படி கிணறு, மோட்டார், மின் இணைப்பு ஆகியன அடங்கலாக புல எண்.149/6ஏ என்ற சொத்து நஞ்சை 1 ஏக்கர் 77 செண்ட் 1ம் பிரதிவாதி கிரையம் வாங்கி கிரைய பாத்தியத்தில் அவர்கள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் தவறு.

நீங்கள் சொல்வது போல் கிணறு, மோட்டார், பம்பு செட் உங்கள் அனுபவத்தில் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.8 ஆவணம், வா.சா.ஆ.1க்கு முந்தைய பதிவு ஆவணம் என்றால் சரிதான். நான் வாங்கிய சர்வே எண் வேறு, அதில் உள்ள சர்வே எண் வேறு. நீங்கள் வழக்கில் கேட்கும் பரிகாரம் உங்களுக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**District Munsif,**
**Manamadurai.**